# சீவிய சி.வி

# 12



சி.வி. என அழைக்கப்படும் சி.வி. வேலுப்பிள்ளை ஒரு நாடறிந்த இலக்கிய கர்த்தா ஆவார். ஆங்கில எழுத்துக்களினூடாக மலையக மக்களின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டியவர். தொடர்ந்து தமிழிலக்கியத்தில் தடம் பதித்தவர்.

தோட்டத் தொழிலாளர்
புத்தி மரக்கட்டையை
தொழிற்சங்கக்காரனாய்
அறிஞனாய்
கவிஞனாய் - வந்து
சீவிச் சீவி
கூர்மைப் படுத்தியவனே!

உன் இறுதி
இலட்சியக் கனவுகளைச்
சொல்லும் போது
மானசீகமாய்
என் தலை
உன் பாதங்களில்
பதியும்!

உன் 'வீடற்றவனி'ன்
கதா நாயகன்
என் கிராமத்து
தெருவழியே நடந்து
சென்றதாய்...
வாசித்தபின்
தெருவையே
நேசிக்கத் தொடங்கினேன்!

'ஆழப்புதைந்த அப்பனின்
சிதைமேல் ஏழைமகனும்....'

தேயிலைகளைப் பார்க்கும்
போது - அவ்வப்போது
இவ்வரிகள்
ரீங்காரமிடும்!

அமாவாசையாய் கிடந்த
நம் நாடோடிப் பாடல்களுக்கு
கோடி நட்சத்திரம்
பூட்டிக் கொடுத்த
உனக்கு என்னய்யா
கைம்மாறு?

உன் சேவைகள்
விழுது பதிந்துவிட்டதை
உணர்ந்த பின் தானோ
பட்டுப் போக மாட்டேன்
என்பதை
'இனிப்பட மாட்டேன்'
என எழுதினாயோ?

சி.வி. இந்த மானுடம்
வாழும் மட்டும் நீயும்
சீவித்துத்தானே
ஆக வேண்டுமையா!



கு. முரளிதரன்



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| மானசீகமாய் | - | உளப்பூர்வமாய் / மனப்பூர்வமாய் |
| சிதை | - | புதைகுழி |
| ரீங்காரமிடும் | - | சீராக ஒலிக்கும் |
| கைம்மாறு | - | பிரதியுபகாரம் |
| விழுது | - | மரங்களின் கிளைகளிலிருந்து வளர்ந்து கீழ் நோக்கித் தொங்கும் வேர் |
| பட்டுப்போதல் | - | அழிதல் / இல்லாமல் போதல் |
| சீவித்து | - | வாழ்ந்து |

## கிரகித்தற் பயிற்சி

*1. கவிதையில் குறிப்பிடப்பட்டுள்ள சி.வி. வேலுப்பிள்ளையின் இலக்கியங்கள் எவை?*

*2. சி.வி., சீவி, சீவித்து ஆகிய சொற்கள் எவ்விதமான கருத்தை உணர்த்துகின்றன?*

*3. 'இனிப்பட மாட்டேன்' எவ்வாறு இரு பொருட்படுகிறது?(சிலேடை மொழி)*

*4. தேயிலைத் தோட்டத்து பாமர மக்கள் சிந்தித்துச் செயற்படுவதற்கு சி.வி. வேலுப்பிள்ளை வழிகோலியதை எவ்வாறு கவிஞர் காட்டுகிறார்?*

*5. சி.வி. யின் இலட்சியங்கள் போற்றத்தக்கன என்பதை இக்கவிதை எவ்வாறு புலப்படுத்துகிறது.*

*6. சி.வி. அவர்களின் படைப்புகள் இக்கவிஞரை மிகவும் ஈர்த்துள்ளன என்பதை எவ்வாறு வெளிப்படுத்துகிறார்?*

*7. கவிஞர் சு. முரளிதரன், சி.வியை கவிதை வரிகளால் சிறப்பிப்பதன் காரணம் யாதென ஊகிக்கிறீர்?*

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

| | | |
|---|---|---|
| செயற்பாடு 1 | : | குழுவாகச் செயற்பட்டு கவிதையை வாசித்துக் காட்டுக. |
| செயற்பாடு 2 | : | குழுவாகச் செயற்பட்டு சி.வி. வேலுப்பிள்ளையின் வரலாறு, படைப்புகள், வேறு ஆக்கங்கள், அவரது சமூகச்செயற்பாடுகள் தொடர்பான தகவல்களைத் திரட்டி ஒப்படை தயாரிக்க. |
| செயற்பாடு 3 | : | மலையகத்தின் முக்கிய படைப்பாளிகள் பற்றிய தகவல்களைத் திரட்டி அட்டைத்தாள் தொகுப்பில் ஒழுங்கமைத்து வகுப்பில் காட்சிப்படுத்துக. |
| செயற்பாடு 4 | : | பாடசாலையில் அண்மையில் நடந்து முடிந்த மன்றக் கூட்டம் ஒன்றின் அறிக்கையை ஆசிரியருடன் கலந்துரையாடி எழுதுக. |

# மொழிவளம்

## ▶இரட்டைக் கிளவி

பின்வரும் உதாரணங்களைக் கவனிப்போம்.

1. நிமல் மட மட என்று குடித்தான்.
2. அங்கம் தங்கமாப் பளபளத்தது.

இவ்வாக்கியங்களில் இடம் பெறும் மடமட, பளபள ஆகிய சொற்கள் இரட்டைக்-கிளவிகளாகும்.

**இரு சொற்கள் அடுத்தடுத்து வந்து ஒலிக்குறிப்பின் மூலம் பொருள் உணர்த்துவதையே இரட்டைக் கிளவி என்பர்.**

இரட்டைக்கிளவிகள் தனித்து நின்று பொருள் தராது. இவற்றை இரண்டாகப் பிரித்தாலும் பொருள் கிடைக்காது.

பின்வரும் பாடலடிகள் இதனையே விளக்குகின்றன.

சல சல இரட்டைக்கிளவி
தக தக இரட்டைக்கிளவி
உண்டெல்லோ தமிழில் உண்டெல்லோ
பிரித்துப் பார்த்தால் ஞாயமில்லை
பிரித்துப் பார்த்தால் பொருளும் இல்லை
இரண்டெல்லோ இரண்டும் ஒன்றெல்லோ....

-வைரமுத்து-

## பயிற்சி

1 **பின்வருவனவற்றைப் பொருள் விளங்குமாறு வாசித்துப் பாப்போம்.**

1. திருடன் தடதட வென ஓடினான்.
2. மாணவரிடையே சல சல உருவானதை ஆசிரியர் கண்டார்.
3. அதிகாலையில் கோயில் மணி டாண் டாண் என ஒலித்தது.
4. கற்பூர வாசனை வீடு முழுவதும் கம கம என வியாபித்திருந்தது
5. நீ என்ன குசு குசு வென்று கதைத்துக் கொண்டு இருக்கிறாய்.

2. **பின்வரும் இரட்டை மொழிகளைப் பொருள் விளங்குமாறு வாக்கியங்களில் அமைத்து எழுதுவோம்.**

| | | |
|---|---|---|
| 1. மள மள | 2. கிடு கிடு | 3. மினு மினு |
| 4. சர சர | 5. தொள தொள | 6. தட தட |


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

# இலக்கணம்

## ▶எழுவாய் வேற்றுமை

ஒரு வாக்கியத்தில் இடம்பெறும் எழுவாயினை எவ்வாறு அறிந்து கொள்வது என்பதனைப் பின்வரும் உதாரணங்களை வாசித்து அறிந்து கொள்வோம்

- ★ தனரஞ்சன் கவிதை எழுதினான்.
- ★ புலி சிங்கத்தைக் கண்டு சீறியது.
- ★ காகங்கள் மேற்கு நோக்கிப் பறக்கின்றன.
- ★ எங்கள் பாட்டி நல்ல கதைகள் சொல்வாள்.

இந்த வாக்கியங்களில் இடம் பெறும் எழுதினான், சீறியது, பறக்கின்றன, சொல்வாள் ஆகிய முற்று வினைகள் அல்லது பயனிலைச் சொற்களுடன் தொடர்புபடுத்தி **யார், எது, எவை** முதலிய கேள்வியை எழுப்பினால் வரும் விடை எழுவாயாக அமையும்.

உதாரணமாக -
தனரஞ்சன் கவிதை எழுதினான்.

என்ற உதாரணத்தில் 'எழுதினான்' என்ற பயனிலையுடன் தொடர்புபடுத்தி 'யார் எழுதிய கவிதை?' என்ற வினாவிற்கு விடையாக அமையும் சொல் 'தனரஞ்சன்' என்ற சொல்லாகும். எனவே இவ்வாக்கியத்தின் எழுவாய் தனரஞ்சன் என்பதாகும்.

இந்த உதாரணங்களில் இடம்பெறும் எழுவாய்ச் சொற்கள் வேற்றுமை உருபும் ஏற்காமல் இருப்பதனைக் காண முடிகிறது. எனவே ஒரு வாக்கியத்தில் இடம்பெறும் பெயர்ச்சொல் திரிபடையாமல் இருக்குமாயின் அதனை எழுவாய் வேற்றுமை எனலாம்.

## பயிற்சி

1. **பின்வரும் வாக்கியங்ளில் இடம்பெறும் எழுவாய்களை இனங்கண்டு எழுதுவோம்.**
    1. நான் இப்போதுதான் வந்தேன்.
    2. மாணவர்கள் ஓவியப் போட்டியில் பங்குபற்றினர்.
    3. யானைகள் அணிவகுத்துச் சென்றன.
    4. சிவா நேற்று வந்தான்.
    5. எங்கள் ஆசிரியை மிகவும் அன்பானவர்.
    6. மாணவர்களும், அதிபரும், ஆசியர்களும் இணைந்து சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.
    7. சி.வி. ஆங்கிலத்தில் புலமை மிக்கவர்.
2. **தரப்பட்டிருக்கும் பயனிலைக்குப் பொருத்தமான எழுவாய்ச் சொற்களை வைத்து எழுவாய் வேற்றுமை அமையும் வாக்கியங்களை அமைப்போம்.**
    1. ...................................... சுற்றுலா சென்றேன்.
    2. ...................................... வீட்டுக்கு வந்தாள்.
    3. ...................................... பறந்து சென்றது.
    4. ...................................... புல் மேய்ந்தன.
    5. ...................................... சத்தமாகப் பேசுகின்றாய்.
    6. ...................................... திருவிழா பார்க்கப் போனோம்.
    7. ...................................... பார்த்திருக்கின்றேன்.